முருகப்பெருமான் துணை

**மகான் யோகானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.04.2024**, வெள்ளிக்கிழமை

1. ஞானகுரு அரங்கா வாழ்க
ஞான வழி உலகை நடத்த
வானவர்கள் அனுப்பி வைத்த
வள்ளலே தேசிகா வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி இனிதே
வழங்குவேன் சோபகிருது சேல் திங்கள்
தாழ்விலா முப்பான் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 30 ம் நாள், 12.04.2024, வெள்ளிக்கிழமை)
தக்கபடி துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை யோகானந்தர் யானும்
அகிலம் மேம்பட உரைப்பேன்
வாசிவென்ற ஞானிகள் எல்லாம்
வலம்வந்து அரங்கன் வழி
4. அரங்கன் வழி பெருந்துணையாக
ஆற்றல்பட இயங்கி வர
வரங்கள் பெற வேண்டின்
வையகத்தார் அரங்கன் குடில்
5. குடில் ஏழாம்படை வீட்டுக்கு
குருவே என வணங்கிவர
நாடிடும் விரும்பும் வரங்கள்
நன்மை தருகின்ற வண்ணம்
6. வண்ணமுடன் சக்தியாக வந்து
வருங்காலம் உணரும் படியான
எண்ணம்தனில் தெளிவு திடமும்
எல்லாம் குருவருளே என்கின்ற
7. என்கின்ற நம்பிக்கை கூடி
இனி பிறவா நிலைதனக்கு
மண்ணுலகில் தேடும் அறிவு
மனபலமும் கூடி நிற்பர்

8. நிற்கவே தொடரும் படியான
நிலமதனில் ஞானவழிச்செயல்
அற்புதமாய் வளரப் பெருக
அரங்கனால் தேர்வு கண்டு

9. கண்டுமே ஞானவான்களாக
கந்தப் பெருமானை காணும்
தொண்டனாக உயர் சீடனாக
தேர்வாகி ஞானிகளாகவே

10. ஆகவே நிலை உயர்ந்து
ஆற்றல்பட உலக மாற்றத்தில்
மகான்களாக பங்களிப்புச் செய்து
மாற்றுவர் ஞானத் தலைமைதன்னை

11. தன்னிலே ஞான ஆட்சியாக
தலைவன் முருகன் அருளும்
நன்மைதரும் ஆட்சியாக உலகம்
நாட்டிடுவேன் கண்டு சிறக்கும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–